# பதிவுசெய்து, வாக்களிக்கத் தயாராகுங்கள்



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

ROE47 A4 Tamil 04/2026

## வாக்களிக்க, ஏன் பதிவு செய்ய வேண்டும்?

நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டிருந்தால், பொதுத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் பங்குபெறலாம். தேர்தல்கள் நீங்கள் அக்கறை கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிப் பாராளுமன்றத்தில் அல்லது உங்களது உள்ளூராட்சிச் சபையில் உங்கள் பிரதிநிதியாக யார் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய உங்களது கருத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களாகும்.

**வாக்களிக்கப் பதிவு செய்வதன் மூலம் உங்கள் குரல் கேட்கப்படுவதை உறுதிசெய்யுங்கள்.**

## வாக்களிக்க யாரெல்லாம் பதிவுசெய்யலாம்?

நீங்கள் பின்வரும் தகுதியுடன் இருந்தால், கண்டிப்பாகப் பதிவுசெய்ய வேண்டும்:

- **உங்களுக்கு வயது 18 அல்லது அதற்கு மேல், மற்றும்**
- **நீங்கள் ஒரு நியூசிலாந்து குடிமகன் அல்லது தேர்தல் நோக்கங்களுக்காக ஒரு குடியிருப்பாளர், மற்றும்**
- **உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு சமயத்தில் தொடர்ந்து 12 மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக நியூசிலாந்தில் வசித்திருக்கிறீர்கள்.**

நீங்கள் நியூசிலாந்தில் சட்டப்பூர்வமாக வசிப்பவராகவும், குறிப்பிட்ட காலத்துக்குள் வெளியேறத் தேவையில்லாதவராகவும் இருந்தால், தேர்தல் நோக்கங்களுக்காக நீங்கள் ஒரு குடியிருப்பாளராகக் கருதப்படுவீர்கள். குடியுரிமை விசாவில் உள்ள ஒருவரும் இதில் அடங்குவார்.

நீங்கள் ஆஸ்திரேலியா, நியுவே, டோக்கெலாவ் அல்லது குக் தீவைச் சேர்ந்தவராக இருந்தால், தொடர்ந்து 12 மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக நீங்கள் நியூசிலாந்தில் வசித்திருந்தால் வாக்களிக்கப் பதிவு செய்யலாம்.

நீங்கள் வெளிநாட்டில் வசித்து வந்து, பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்தால், நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்யலாம்:

- **உங்களுக்கு வயது 18 அல்லது அதற்கு மேல், மற்றும்**
- **உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு சமயத்தில் தொடர்ந்து 12 மாதங்களுக்கும் மேலாக நியூசிலாந்தில் வசித்திருக்கிறீர்கள், மற்றும்**
- நீங்கள்: **ஒரு நியூசிலாந்து குடிமகன், கடந்த 3 வருடங்களுக்குள் நீங்கள் நியூசிலாந்தில் இருந்துள்ளீர்கள், அல்லது நீங்கள் தேர்தல் நோக்கங்களுக்காக ஒரு நியூசிலாந்து குடியிருப்பாளர், கடந்த 12 மாதங்களுக்குள் நியூசிலாந்தில் இருந்துள்ளீர்கள்.**

நீங்கள் 17 வயது அடைந்ததும், நீங்கள் பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் 18 வயது அடைந்ததும், நீங்கள் தானாகவே பதிவு செய்யப்படுவீர்கள், வாக்களிக்கத் தயாராக இருப்பீர்கள்.

## நீங்கள் மாவோரியாக இருந்தால், வாக்களிக்கப் பதிவு செய்தல்

நீங்கள் ஒரு மாவோரி வம்சத்தவராக இருந்து, முதன்முறையாக வாக்களிக்கப் பதிவு செய்கிறீர்கள் என்றால், நீங்கள் பொது வாக்காளர் பட்டியல் அல்லது மாவோரி வாக்காளர் பட்டியல், இதில் எந்த வாக்காளர் பட்டியலில் இருக்க விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்.

உங்கள் பட்டியல் தெரிவு பின்வருவனவற்றைத் தீர்மானிக்கும்:

- நீங்கள் எந்தத் தேர்தல் தொகுதியில் வாக்களிக்கிறீர்கள் என்பதையும்
- நீங்கள் எந்த வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும் தீர்மானிக்கும்.

நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், நீங்கள் எந்த வாக்காளர் பட்டியலில் இருக்கிறீர்கள் என்பதை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம், பின் வரும் சூழல்கள் நீங்கலாக:

- 3 வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் பொதுத் தேர்தல் அல்லது உள்ளாட்சித் தேர்தல்களுக்கு முந்தைய 3 மாதங்களில்
- பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கு முன்னர், இந்த மாற்றமானது இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிக்குள் உங்களை சேர்க்கும் எனில்.

**உங்களது பட்டியல் தெரிவு உங்களுக்கு எப்படி உதவும்?**

ஒரு பொதுத் தேர்தலில், நீங்கள் பொதுப் பட்டியலைத் தேர்வு செய்தால், நீங்கள் ஒரு பொதுத் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் மாவோரி பட்டியலைத் தேர்வு செய்தால், நீங்கள் ஒரு மாவோரி தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் எந்தப் பட்டியலில் இருந்தாலும், அதே அரசியல் கட்சிகளின் பட்டியலுக்கு நீங்கள் வாக்களிக்கலாம்.

நீங்கள் தெரிவு செய்யும் பட்டியல் நீங்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் யாருக்கு வாக்களிக்கலாம் என்பதைப் பாதிக்கலாம். நீங்கள் மாவோரி பட்டியலைத் தெரிவு செய்து, உங்கள் உள்ளூராட்சிச் சபை ஒரு மாவோரி வார்டு அல்லது தொகுதியைக் கொண்டிருந்தால், நீங்கள் மாவோரி வார்டு அல்லது தொகுதியில் உள்ள பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் பொதுப் பட்டியலைத் தெரிவு செய்தால், நீங்கள் பொது வார்டில் அல்லது தொகுதியில் உள்ள பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பீர்கள்.

## உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கவலையா?

நீங்கள் உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பை அல்லது உங்களது குடும்பத்தின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் இரகசியமான வெளியிடப்படாத பட்டியலில் சேர்க்கப்பட விண்ணப்பிக்கலாம். நாம் உங்கள் பதிவு விபரங்களைப் பத்திரமாக வைத்திருப்போம், அவற்றை யாருக்கும் கொடுக்க மாட்டோம். நீங்கள் வெளியிடப்படாத பட்டியலில் இருந்தால், உங்கள் விவரங்கள் அச்சிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்படாது, உங்கள் விபரங்களை நீங்கள் இணையம் வழியாக பார்க்கவோ அல்லது புதுப்பிக்கவோ முடியாது.

நீங்கள் வாக்களிக்கும்போது, நீங்கள் ஒரு சிறப்பு வாக்கை முடிக்க வேண்டும், அதோடு நீங்கள் எந்தத் தேர்தல் தொகுதியில் வாக்களிப்பதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை உறுதிசெய்ய உங்கள் வாக்குச் சீட்டுடன் ஒரு கூடுதல் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். கூடுதல் தகவலுக்கும், விண்ணப்பப் படிவத்துக்கும் **vote.nz** வலைத்தளத்திற்குச் செல்லவும் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்.

## நான் எவ்வாறு பதிவு செய்வது?

பதிவு செய்வது அல்லது உங்கள் விவரங்களைப் புதுப்பிப்பது எளிதாகும். நீங்கள்:

- உங்கள் நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து கடவுச்சீட்டு அல்லது RealMe மூலம் சரிபார்க்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தி **vote.nz** வலைத்தளத்தில் பதிவு செய்யலாம்
- **0800 36 76 56** என்ற கட்டணமில்லா எண்ணுக்கு அழைத்து, உங்களுக்கு ஒரு வாக்காளர் பதிவு படிவத்தை அனுப்பச் சொல்லிக் கேட்கலாம்.

படிவத்தைப் பூர்த்தி செய்ததும், அதில் கையொப்பமிட்டு, அதை எங்களுக்குத் திருப்பி அனுப்பவும். நீங்கள் பதிவு செய்ததும், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேரும். வாக்காளர் பட்டியல் என்பது தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ள நபர்களின் பட்டியல் ஆகும். வாக்களிப்பதற்கு நீங்கள் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறை நீங்கள் வீடு மாறும் போதும் உங்கள் விவரங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

பதிவு செய்தலைப் பற்றியும் வாக்களிப்பதைப் பற்றியும் நாங்கள் உங்களைத் தொடர்புகொள்ளும் பொருட்டு, உங்கள் மின்னஞ்சல் முகவரியும் தொலைபேசி எண்ணும் எங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும்.

நீங்கள் முதல் முறையாகப் பதிவு செய்யும்போது அல்லது உங்கள் விபரங்கள் எதையாவது புதுப்பிக்கும்போது, உங்கள் விபரங்கள் சரியாக உள்ளனவா என்பதைச் சரிபார்க்க உங்களுக்கு ஒரு கடிதம் அல்லது மின்னஞ்சலை அனுப்புவோம்.

## பதிவு செய்ய உதவி தேவையா?

உங்கள் பதிவுப் படிவத்தை நிரப்ப நீங்கள் ஒரு நண்பர் அல்லது வீட்டிலுள்ளவர் போன்று உங்களுக்குத் தெரிந்த ஒருவரை உதவச் சொல்லிக் கேட்கலாம், அல்லது அவர்களையே படிவத்தை நிரப்பித் தரச் சொல்லலாம்.

நீங்கள் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

உடல் அல்லது மனநலக் கோளாறு காரணமாக, தங்கள் பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்து, கையொப்பமிட இயலாத யாரையும் உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் அவர்களுக்கு உதவலாம்.

## மேலும் தகவல் தேவையா?

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்து கூடுதல் தகவல்களுக்கு:

- **vote.nz** வலைத்தளத்திற்குச் சென்று பார்க்கவும்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்

பதிவு செய்வதையும் வாக்களிப்பதையும் பற்றிய தகவல்கள் பல மொழிகளிலும், மாற்று வடிவங்களிலும் **vote.nz** என்ற வலைத்தளத்தில் கிடைக்கப் பெறுகின்றன.

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI